14th December 1959]

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : தற்சமயம் கிராமப்புறங்களில் இருக்கும் ஹரிஜனங்களுக்குத்தான் இந்தச் சலுகை கொடுக்கப்படுகிறது. பொருளாதார நிலையில் நகரப்புறங்களில் உள்ள ஹரஜனங்கள் கிராமப்புறங்களில் உள்ள ஹரிஜனங்களைவிடச் சிறந்தவர்கள் என்று நாம் சொல்ல முடியாது. எனவே இனிமேல் இந்த 750 ரூபாய் நகரப்புறங்களிலுள்ள ஹரிஜனங்களுக்கும் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். 9-30 a.m.

THE HON. SRI P. KAKKAN : வீடு கட்டும் விஷயத்தில், நகரப்புறங்களிலுள்ள ஹரிஜனங்களின் . நிலைமையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் முதலில் சென்னை நகரை இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டோம். அதற்குப் பிறகு திருச்சி, சேலம், கோயம்புத்தூர், மதுரை முதலிய நகரங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இனிமேல்தான் மற்ற நகரங்கள் கவனிக்கப்படும்.

SRI T. KARIA GOUNDER : மலையில் வசிக்கும் மலைவாசிகளுக்காவது 1,000 ரூபாய் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

MR. SPEAKER : This question is about Harijans.

SRI T. KARIA GOUNDER : நான் 'ஹில் ட்ரைப்ஸ்'-ஐப் பற்றிக் கேட்கிறேன் ; ஆதிவாசிகளைப் பற்றிக் கேட்கிறேன்.

MR. SPEAKER : Do they come under the category 'Harijans'?

SRI T. KARIA GOUNDER : Yes, Sir.

THE HON. SRI P. KAKKAN : மலையில் வசிக்கும் ஆதிவாசிகளுக்கும் அதிகப்படியாக ரூபாய் கொடுத்து உதவி செய்யப்படுகிறது.

Rural Housing Schemes

*156 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the amount allotted for 1958-59 under the State Rural Housing Schemes was not utilized ; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) No Sir. The amount allotted was fully utilised.

SRI K. SATTANATHA KARAYALAR : மொத்தம் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? அதில் திட்டமிட்டபடி கட்ட வேண்டிய கட்டிடங்கள் எவ்வளவு? அவை கட்டப்பட்டுவிட்டனவா, அதாவது 'பிஸிகல் டார்கெட்ஸ்' 'அசீவ்' செய்யப்பட முடிந்ததா ?

THE HON. SRI V. RAMAIAH : 1958-59-க்கு ஒதுக்கப்பட்ட தொகை மொத்தம் 3 லட்ச ரூபாய். அதில் வீடு கட்டுவதற்காகச் செலவிடப்பட்டிருப்பது ரூ. 2,99,700.